18.03.2025 S.C.No.138 of 2017 P.W.14 – Ravi

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.45 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: எதிரிகளில் மார்டின் பிரேம்ராஜ்–ஐ தவிர மற்ற எதிரிகள் வெவ்வேறு காவல் நிலையத்திலிருந்து பணிக்கு வந்தவர்கள் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: ஆஜர் எதிரி மார்டின் பிரேம்ராஜ் சர்கில் இன்ஸ்பேக்டர் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: வழக்கில் உள்ள எதிரிகள் அனைவருமே 19.06.2015 வரை சிறப்பு பணி நிமித்தமாக உயர் அதிகாரிகளால் நியமிக்கப்பட்டு வேறு பணிகளில் இருந்தார்கள் என்றால் ?

பதில்: அதைப்பற்றி எனக்கு தெரியாது. மார்டின் பிரேம்ராஜ் ஆய்வாளரை தவிற மற்ற எதிரிகள் Crime special party ஆவார்கள். ஆய்வாளர் அழைக்கும் பட்சத்தில் அவர்கள் எந்த ஒரு பணிக்கும் செல்ல வேண்டும்.

கேள்வி: Crime special party என்று சொல்கிறீர்களே அதை நியமித்தது உயர் அதிகாரிகள்தான் என்றால்?

பதில்: சரிதான்.

கேள்வி: உயர் அதிகாரிகள் ஒரு ஆணை நியமித்து கொடுத்த பணியில் வழக்கின் எதிரிகள் இருந்தார்கள் என்றால் ?

பதில்: அதிகாரிகள் டியூட்டி போட்டால் பார்த்துதான் ஆக வேண்டும்.

கேள்வி: அதனால் 16.06.2015 முதல் 19.06.2015 வரை வழக்கின் எதிரிகள் சிறப்புக்குழுவில் உயர் அதிகாரிகளின் ஆணையை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றால் ?

பதில்: அதைப்பற்றி எனக்கு தெரியாது. மீண்டும் அந்த கேள்வியை விளக்கி சொன்னபோது சாட்சி வழக்கின் எதிரிகள் சிறப்பு பணிக்கு சென்றுவிட்டு ஆய்வாளர் வந்துவிட்டார்.

கேள்வி: வழக்கின் எதிரிகள் எல்லாம் 16.06.2015 முதல் 19.06.2015 வரை வேறு பணியில் இருந்தார்கள் என்றால் ?

பதில்: தவறு.

கேள்வி: வழக்கின் எதிரிகள் எந்தெந்த பணியில் இருந்தார்கள் என்றால்?

பதில்: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணி பதிவேடுகளில் அவர்கள் வரமாட்டார்கள்.

கேள்வி: பள்ளிக்கொண்டா காவல் நிலைய டியூட்டி ரோஸ்டர் மற்றும் ரப் டியூட்டி ரோஸ்டரில் வழக்கின் எதிரிகள் எந்தெந்த பணிகளில் இருந்தார்கள் என்றால் ?

பதில்: வழக்கின் எதிரிகள் சிறப்பு குழுவில் இருந்ததால் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பணியில் வரமாட்டார்கள். ஆய்வாளர் அந்த பதிவேட்டில் வருவார். ரப் டியூட்டி ரோஸ்டர் அடிப்படையில் 16.06.2015 அன்று மார்டின் பிரேம்ராஜ் ஆம்பூர் டியூட்டி என்று போடப்பட்டுள்ளது.

கேள்வி: டியூட்டி ரோஸ்டர் என்பது சர்க்கிலுக்கு ஒரு டியூட்டி ரோஸ்டரும் காவல் நிலையத்திற்கு ஒரு டியூட்டி ரோஸ்டரும் இருக்கும் என்றால்?

பதில்: அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி: சர்க்கில் இன்ஸ்பெக்டருக்கு தனியாக டியூட்டி ரோஸ்டர் இருக்கும் என்றால் ?

பதில்: அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி: வழக்கின் எதிரிகள் அனைவரும் 16.06.2015 முதல் 19.06.2015 வரை என்னென்ன பணிகள் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால்?

பதில்: தெரியாது. 16.06.2015 அன்று மார்டின் பிரேம்ராஜ் ஆய்வாளர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்தார்.

கேள்வி: 16.06.2015 அன்றைய தேதிய பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஜிடி என்ட்ரியில் மார்டின் பிரேம்ராஜ் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு வருகை புரிந்தார் எத்தனை மணிக்கு சென்றார் என்ற குறிப்பு உள்ளதா என்றால் ?

பதில்: அதைப்பற்றிய எந்த குறிப்பும் அதில் இல்லை.

கேள்வி: அதனால் ஜிடி என்ட்ரியில் குறிப்பு எதுவும் இல்லாமல் மார்டின் பிரேம்ராஜ் காவல் நிலையத்திற்கு வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால்?

பதில்: சரியல்ல.

கேள்வி: எதன் அடிப்படையில் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு மார்டின் பிரேம்ராஜ் வந்தார் என்று கூறுகிறீர்கள் ?

பதில்: சில செய்திகளை ஆய்வாளர் உத்தரவு இல்லாமல் ஜிடி என்ட்ரியில் போடமாட்டோம்.

கேள்வி: ஜிடி என்ட்ரியில் என்னென்ன செய்திகள் பதிவிடப்படவேண்டும் என்றால்?

பதில்: காவல் நிலையத்தில் பதிவிடப்படும் வழக்குகள், பெறப்படும் மனுக்கள் தொடர்பாக, நபர்கள் யாரையெனும் விசாரணை செய்தது தொடர்பாக மற்றும் வேறு விசேஷம் எதுவும் இல்லை என்றால் பதிவிட வேண்டும்.

கேள்வி: ஆய்வாளர் சொன்னால்தான் ஜிடி என்ட்ரியில் பதிவிட வேண்டும் என்று எந்த சட்டம் சொல்கிறது என்றால் ?

பதில்: சட்டம் சொல்லவில்லை, தெரியாது.

கேள்வி: 16.06.2015 தேதியில் எத்தனை பக்கங்கள் ஆய்வாளர் சொல்லி ஜிடி என்ட்ரி பதிவிடப்பட்டுள்து என்று ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால்?

பதில்: இரண்டு பக்கங்கள் பதியப்பட்டுள்ளது. ஆய்வாளர் சொல்லி பதிவிடப்பட்டதாக எந்த ஒரு குறிப்பும் இல்லை.

கேள்வி: 16.06.2015 முதல் பள்ளிக்கொண்டா காவல் நிலைய SHO பொறுப்பு அதிகாரி நான்தான் என்றால் ?

பதில்: நான் இல்லை. என்னை விட மூத்த அதிகாரிதான் SHO ஆவார். எனக்கு மேல் சிங்காரம், ராஜேந்திரன், தண்டபானி அவர்களும் எஸ்எஸ்ஐ தான் அவர்கள் என்னை விட பணியில் மூத்தவர்கள். பணியில் மூத்தவர் SHO ஆக இருப்பார்.

கேள்வி: 16.06.2015 யார் ஜிடி டியூட்டி என்றால்?

பதில்: நான்தான்.

கேள்வி: பள்ளிக்கொண்டா காவல் நிலைய ரப் டியூட்டி ரோஸ்டரை பார்த்து (எ.த.சா.ஆ.7) என்ன எழுதியிருக்கிறது என்றால் ?

பதில்: செம்மரம்/DSP/ Escort/Ins. SSI–Singh Kalal HC 257

16.06.2015 இரவு 18.06.2015

09:00 to 13:00 hrs

21:00 to 01:00 hrs என்று உள்ளது.

கேள்வி: Police standing order (PSO) படி நிலையத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளையும் ஜிடியில் எழுத வேண்டும் ஆனால் தாங்கள் எதையுமே 16.06.2015 எழுதாமல் வேண்டுமென்றே குற்றம் இழைத்திருக்கிறீர்கள் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: நீங்கள் ஒவ்வொரு நாளும் நாட்குறிப்பு எழுதி ஒவ்வொரு வாரமும் ஆய்வாளரிடம் கையெழுத்து வாங்கினீர்களா ?

பதில்: செய்திருக்கிறேன்.

கேள்வி: அதை சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா ?

பதில்: கொடுக்கவில்லை.

கேள்வி: உங்களுடைய Daily Dairy–ஐ சிபிசிஐடியிடம் கொடுத்திருந்தால் உண்மை வெளிவந்து தாங்களே குற்றவாளி கூண்டில் நிற்க வேண்டியது இருக்கும் என்பதால் அதை தரவில்லை என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: Woman missing புகார் என்று பெறப்பட்டது என்றால் ?

பதில்: 26.05.2015 அன்று பெறப்பட்டுள்ளது.

கேள்வி: அதைப்பற்றி ஜிடியில் குறித்துள்ளேனா என்றால் ?

பதில்: குறித்துள்ளேன்.

கேள்வி: Woman missing புகாரினுடைய தேதி என்ன ?

பதில்: புகாரில் தேதி இல்லை.

கேள்வி: 25.05.2015 அன்று புகாரை வாங்கிக்கொண்டு உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதியாமல் ஒரு நாள் கழித்து FIR போட்டிருக்கிறீர்கள். தாங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக அதை 26 தேதியில் பதிவு செய்ததாக FIR போட்டு அதையே ஜிடி என்ட்ரியிலும் எழுதியிருக்கிறீர்கள் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: Online FIR இருக்கிறது என்று சொல்லும் நீங்கள் அதை ஏன் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை ?

பதில்: Online FIR அந்த நேரத்தில் வந்துவிட்டது. ஆனால் Print எடுக்கவில்லை.

கேள்வி: Online FIR நீதிமனற்த்தில் கொடுத்தீர்களா ?

பதில்: நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை.

கேள்வி: குற்ற எண். 140/2015 முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 26.05.2015 அன்றைய தேதியிலேயே கொடுக்கப்பட்டதா என்றால் (ஆவணத்தை பார்த்து சொல்லவும்)?

பதில்: Despatch Register காவல் நிலையத்தில்தான் இருக்கும்.

கேள்வி: அ.த.சா.ஆ.19 ல் உள்ள FIR குற்ற எண் 140/2015 ல் பள்ளிக்கொண்டா காவல் நிலைய முத்திரை உள்ளதா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: அ.த.சா.ஆ.19 ல் இருக்கின்ற 26 தாள்களை நான் சிபிசிஐடியிடம் கொடுத்தேனா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: யார் மேற்கண்ட ஆவணத்தை சிபிசிஐடியிடம் கொடுத்தார்கள் என்று கடிதமோ குறிப்போ இருக்கிறதா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: Woman missing FIR போட்ட பிறகு எத்தனை பேரை விசாரித்தேன் என்றால் ?

பதில்: ஆறு பேரை விசாரித்தேன்.

கேள்வி: எந்தெந்த தேதியில் அந்த ஆறுபேரை விசாரித்தேன் என்று அ.த.சா.ஆ.19 ல் தேதி போட்டிருக்கிறீர்களா ?

பதில்: இல்லை.

கேள்வி: 26.05.2015 அன்று ஜிடி டியூட்டி யார் என்றால் ?

பதில்: நான்தான்.

கேள்வி: அன்றைய தேதியில்(26.05.2015) யார்யாரை விசாரித்தேன் என்ற குறிப்பு ஜிடியில் பதியப்பட்டுள்ளதா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: அ.த.சா.ஆ.19 ல் தாங்கள் விசாரித்ததாக வாக்குமூலங்கள் உள்ளன. அவைகளில் தேதியிடப்பட்டுள்ளனவா ?

பதில்: தேதி குறிப்பிடப்படவில்லை.

கேள்வி: அ.த.சா.ஆ.19 ல் தங்களால் தயாரிக்கப்பட்டதாக உள்ள வாக்குமூலங்களில் தேதியிடப்படாததால் பின்னிட்ட தேதியில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு வாக்குமூலங்கள் செய்ததாக தயாரித்து வைத்திருக்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: உங்களுடைய முதல் விசாரணையில் "சைபர் கிரைம் போலீஸ்க்கு அந்த எண்ணை கொடுத்து அதன் Call details records எடுத்து கொடுக்க கேட்டுக்கொண்டேன்" என்று சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் எந்த தேதியில் கொடுத்தீர்கள் ?

பதில்: தேதி சரியாக நினைவில்லை. ஆனால் கொடுத்து பெறப்பட்டது.

கேள்வி: நான் கொடுத்த கடிதத்தின் நகலை சிபிசிஐடியிடம் கொடுத்தேனா என்றால் ?

பதில்: கொடுத்தேன்.

கேள்வி: தாங்கள் இந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லியவாறு எந்த கடிதமும் சைபர் கிரைமுக்கு கொடுக்கவில்லை. தாங்கள் இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: ஒரு Unknown number–ஐ கொடுத்தார்கள். அதை சைபர் கிரைமிலிற்கு அனுப்பினேன் என்று கூறிகிறீர்கள். அந்த எண்ணின் கால் டிடெய்ல்ஸ்–ஐ என்று பெற்றீர்கள் ?

பதில்: தேதி நினைவில்லை.

கேள்வி: அந்த Call details–ஐ யாரிடம் கொடுத்தீர்கள் ?

பதில்: உயர் நீதிமன்ற வழக்கில் அந்த நகலை கொடுத்தேன்.

கேள்வி: தொலைப்பேசி எண் ஈரோட்டில் இருந்து வந்தது என்று கண்டுபிடித்தோம் என்று முதல் விசாரணையில்

கூறியிருக்கிறீர்கள். எதன் அடிப்படையில் சொல்லியிருக்கிறீர்கள்?

பதில்: அவ்வாறு நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை.

கேள்வி: 03.06.2015 ஒரு ஆட்கொணர்வு மனு பழனி என்பவர் போட்டதற்கு உயர் நீதிமன்றம் சென்று பதில் கொடுத்தீர்களா?

பதில்: ஆய்வளார்தான் கொடுக்க வேண்டும்.

கேள்வி: எந்த ஆய்வாளர் கொடுத்தார் என்றால் ?

பதில்: எனக்கு தெரியாது. அந்த காலக்கட்டத்தில் யார் ஆய்வாளராக இருந்தாரோ அவர் கொடுத்திருப்பார்.

கேள்வி: அந்த உயர்நீதிமன்ற ஆட்கொணர்வு மனுவுக்கு நான்தான் சென்று உரிய பதிலை 05.06.2015 அன்று சொல்லி வந்தேன் என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: 19.06.2015 எஸ்ஜ கலைச்செல்வன் உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞரிடம் கொடுத்த தகவலில் ஒரு புதிய சிறப்புக்குழு போடும்படி உயர் நீதிமன்றம் பணித்திருக்கிறது. தாங்கள்தான் Woman missing வழக்கில் FIR போட்டு விசாரணை செய்திருக்கிறீர்கள். அதனால் காணாமல் போனவரை கண்டுபிடிப்பதற்காக ஒரு சிறப்புக்குழு போட்டீர்களா ?

பதில்: நான் ஒரு Senior Head constable SSI நிலையில் உள்ளேன். எனவே Woman missing வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிந்து வழக்கு கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு விசாரணைக்கு வைத்தேன்.

கேள்வி: Woman missing வழக்கிற்கு special teem போட்டார்களா?

பதில்: போட்டார்கள்.

இடைவேளை மாலை 05.45

இடைவேளை முடிந்து குறுக்கு விசாரணை மீண்டும் தொடங்கிய நேரம் மாலை 05.55.

கேள்வி: HCP எத்தனை மாதங்கள் உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது ?

பதில்: ஆறு மாதங்கள் நடைபெற்றது.

கேள்வி: எத்தனை முறை உயர்நீதிமன்றத்திற்கு சென்று வந்தீர்கள் ?

பதில்: 50 முறை சென்று வந்தேன்.

கேள்வி: ஏற்கனவே நீங்கள் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சொன்ன முதல் வாக்குமூலத்தில் ஆம்பூர் காவல் நிலைய போலீசாருக்கு அந்த ஈரோடு தொலைப்பேசி எண்னை கொடுத்தார் என்றும் அவர் அந்த தொலைப்பேசி எண்ணில் உள்ள நபர் ஆம்பூரில் இருப்பதாக தகவல் சொன்னார் என்று சொல்லியிருக்கிறீர்கள் ?

பதில்: சிபிசிஐடி சொன்ன தகவலை இந்த நீதிமன்றத்தில் சொன்னேன்.

கேள்வி: அந்த நபர் ஆம்பூரில் இருப்பதாக சொன்னார் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை யார் சொன்னார்கள்?

பதில்: அரியூர் காவல் நிலையத்தில் உள்ள ரவி என்ற எஸ்எஸ்ஐ அவருக்கு பவித்ரா Woman missing case–ல் புகார்தாரராக பழனியை தெரியும் என்றும், அவர் சொன்னதாக சொன்னார். ஆம்பூரில் இருப்பதாக என்னிடம் சொன்னார் என்று நான் சொல்லவில்லை.

கேள்வி: மேற்சொன்ன பதிலை தங்களின் முதல் விசாரணையில் கூறியிருக்கிறீர்களா ?

பதில்: அரியூர் காவல் நிலைய ரவி என்று அதில் இல்லை.

கேள்வி: ஷமீல் பாஷாவினுடைய குடும்பத்தார் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்று கூறியிருக்கிறீர்கள். யார் தகவல் சொன்னது ?

பதில்: யாரோ ஒரு ஆம்பூர் காவல் நிலைய காவலர் சொன்னார்.

கேள்வி: ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்து பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு தகவல் முறையாக தெரிவிக்கப்பட்டது. அதை

மறைத்து இந்த நீதிமன்றத்தில் நீங்கள் பொய் சாட்சி சொல்கிறீர்கள்?

பதில்: சரியல்ல.

கேள்வி: புகார் கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்று கூறியிருக்கிறீர்கள் அதனை பொதுநாட்குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறீர்களா ?

பதில்: இல்லை.

கேள்வி: தங்களின் முதல் விசாரணையில் ஆம்பூர் காவல் நிலையத்திற்கு தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு விசாரித்தேன் என்று கூறியிருக்கிறீர்கள். யாரிடம் விசாரித்தீர்கள் ?

பதில்: பெயர் நினைவில்லை. தகவலை கேட்டேன். ஆம் என்றார்கள்.

கேள்வி: இந்த தகவலையாவது பொதுநாட்குறிப்பில் பதிந்தீர்களா ?

பதில்: பதிவு செய்யவில்லை.

கேள்வி: ஷமீல் பாஷா வந்துள்ளதாக சொன்னார்கள் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள், யார் என்று சொல்ல முடியுமா ?

பதில்: பெயர் தெரியாது.

கேள்வி: அவர்களை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்பும்படி நான் கேட்டுக்கொண்டேன் என்று முதல் விசாரணையில் கூறியிருக்கிறீர்கள், அதனை பொதுநாட்குறிப்பில் எழுதியிருக்கிறீர்களா ?

பதில்: இல்லை.

கேள்வி: 16.06.2015 மூன்று பேர் ஆதாவது ஷமில் பாஷா, அவருடைய அப்பா ஷாஜகான், அவருடைய மாமா (பெயர் நினைவில்லை) என்று கூறிவிட்டு மூன்று பேர் வந்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள் எதை மறைப்பதற்காக எண்ணிக்கையில் குறைத்து கூறினீர்கள் ?

பதில்: மூன்று பேர்தான் வந்தார்கள்.

கேள்வி: 16.06.2015 ஷமீல் பாஷாவை அழைத்து என்ன நடந்தது என்று விசாரித்தேன் என்று தங்களது முதல் விசாரணையில் கூறியிருக்கிறீர்கள். இதனை பொதுநாட்குறிப்பில் பதிவிட்டிருக்கிறீர்களா ?

பதில்: இல்லை.

கேள்வி: ஷமீல் பாஷாவை 16.06.2015 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா ?

பதில்: பதிவு செய்தேன். அவர் கைப்பட எழுதிக்கொடுத்தார்.

கேள்வி: மேலே கூறியபடி பதிவு செய்தேன். அவர் கைப்பட எழுதிக்கொடுத்தார் என்று சிபிசிஐடியிடம் கூறினீர்களா ?

பதில்: கூறினேன்.

கேள்வி: 16.06.2015 ஷமீல் பாஷாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக தங்களின் சிபிசிஐடியால் பதிவு செய்யப்பட்ட கு.வி.மு.ச 161 வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா ?

பதில்: நான் சிபிசிஐடியிடம் கூறினேன். அது கு.வி.மு.ச 161 வாக்குமூலத்தில் எழுதப்படவில்லை.

கேள்வி: தாங்கள் சிபிசிஐடியிடம் சொன்ன வாக்குமூலத்தை சிபிசிஐடி கைப்பட எழுதிக்கொண்டார்களா என்றால் ?

பதில்: எழுதிக்கொண்டார்கள்.

கேள்வி: அதில் கையெழுத்து போட்டீர்களா ?

பதில்: கையெழுத்து போட்டேன்.

கேள்வி: தங்களின் கு.வி.மு.ச 161 வாக்குமூலத்தில் இரண்டாவது பக்கத்தில் மேலிருந்து கீழாக 13 வது வரியில் "மதியம் சுமார் 02.00 மணிக்கு ஷமீல் பாஷாவை அவரது மாமனார் கௌஷ் பாஷா மற்றும் ஆம்பூர் நகர இந்திய தௌகித் ஜமாத் செயலாளர் ஜாகீர் அகமது ஆகியோர் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தனர்" என்று உள்ளது என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: தங்களின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் ஷமீல் பாஷாவின் தந்தை ஷாஜகான் வந்ததாக கூறியிருக்கிறீர்களா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: தாங்கள் ஆம்பூர் நகர இந்திய தௌகித் ஜமாத் செயலாளர் ஜாகிர் அகமது வந்ததை வேண்டுமென்றே மறைத்து அவரை காப்பாற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்தில் தங்களின் முதல் விசாரணையில் ஜாகீர் அகமது என்ற பெயரை குறிப்பிடாமல் பொய் சொல்லியிருக்கிறீர்கள் என்றால்?

பதில்: அவரது பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை.

கேள்வி: 16.06.2015 தங்களின் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு யார் யார் தங்கவைக்கப்பட்டிருந்தனர் என்பதற்கான ஆவணம் எது?

பதில்: ஜிடி என்ட்ரி போடவேண்டும். ஆனால் போடவில்லை.

கேள்வி: யார் யாரை நிலையத்தில் இரவு தங்கவைத்திருந்தார்கள் என்பதை பதிவு செய்து வைக்க ஒரு தனி பதிவேடு காவல் நிலையத்தில் இருக்க வேண்டும் அவ்வாறு உள்ள ஆவணத்தை சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா ?

பதில்: இல்லை.

கேள்வி: 16.06.2015 இரவு ஷமீல் பாஷாவை விசாரித்த போலீஸ்காரர் யார் ?

பதில்: இரவு நேரத்தில் விசாரிக்கப்படவில்லை.

கேள்வி: 16.06.2015 தங்களின் டியூட்டி காலம் (Timings) என்னென்ன ?

பதில்: GD, Night rounds.

கேள்வி: இரவு ரோந்து என்றால் நிலையத்தில் இருப்பீர்களா அல்லது ஊர்க்காவல் பணிக்கு செல்வீர்களா ?

பதில்: ஊர்க்காவல் பணிக்கு சென்று வருவோம்.

கேள்வி: இரவு ரோந்துக்கு நீங்கள் சென்றபின் அன்று இருந்த காவலர் ஷமீல் பாஷாவை விசாரித்து அவரின் கையை முறித்தது உங்களுக்கு தெரியுமா ?

பதில்: அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி: 16.06.2015 அன்று இரவு ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்தார் என்பதற்கு ஏதாவது ஒரு ஆவணம் பதிவு செய்திருக்கிறீர்களா ?

பதில்: பதிவு செய்யவில்லை.

கேள்வி: அதனால் தாங்கள் ஊர்க்காவல் பணிக்காக வெளியில் சென்றபோது நிலையத்தில் ஷமீல் பாஷாவுக்கு நடந்த குற்றவியல் தொடர்புடைய செய்திகளை மறைப்பதற்காகவே ஷமீல் பாஷா 16.06.2015 இரவு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்தார் என்று எந்த ஆவணத்திலும் பதிவு செய்யாமல் மிகப்பெரிய குற்றத்தை செய்திருக்கிறீர்கள் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: தங்களின் கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தின் இரண்டாவது பக்கத்தில் கீழிருந்து மேலாக 10 வது வரியில் "16.06.2015 தேதி இரவு நானும் பாரா கிரேடு 1 பிசி 3604 சீனிவாசன் ஆகியோரும் ஷமீல் பாஷாவை ஸ்டேசனில் வைத்து பார்த்துக்கொண்டோம்" என்று இருக்கிறது என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: அதனால் 16.06.2015 இரவு ஷமீல் பாஷாவிற்கு நிகழ்ந்த குற்றவியல் தாக்குதலை மறைப்பதற்காகவே தாங்கள் எந்த ஆவணங்களிலும் பதிவு செய்யாமல் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: 16.06.2015 இரவு ஷமீல் பாஷாவுக்கு நிகழ்ந்த குற்றவியல் தாக்குதலை மறைப்பதற்காகவே தாங்கள் இந்த நீதிமன்றத்தில் ஏற்கனவே முதல் விசாரணை செய்யும்போது "ஷமீல் பாஷாவை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருக்க சொன்னார். அதன் பின்னர் 1ம் எதிரி ஷமீல் பாஷாவை அன்று மாலை வந்து விசாரித்தார்" என்று பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: பள்ளிக்கொண்டா காவல் நிலைய (பட்டியல் ஆவண எண்.37) 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் தாங்கள் இரவு ஊர்க்காவல் சுற்றுக்காக சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஜிடி பொறுப்பும் தாங்கள் வைத்திருந்ததாக மேற்கண்ட ஆவணம் கூறுகிறது. இந்த நிலையில் ஷமீல் பாஷா நிலையத்தில் இருந்ததை ஏதேனும் ஒரு ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதியிருக்கிறீர்களா ?

பதில்: இல்லை.

கேள்வி: "சிடிஆர் எடுத்து பவித்ராவின் குடும்பத்தார் ஷமீல் பாஷாவின் வீட்டிற்கு வந்து பிரச்சினை செய்ததாக சொன்னார். இந்த தகவலை பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளர் 1ம் எதிரி மார்டின் பிரேம்ராஜிடம் சொன்னேன்" என்று தங்களின் முதல் விசாரணையில் கூறியிருக்கிறீர்கள். அவ்வாறு 1ம் எதிரி கூறியதற்காக ஏதேனும் ஆவணங்களோ, பதிவுகளோ, ஜிடி என்ட்ரியோ உள்ளனவா ?

பதில்: இல்லை.

கேள்வி: 1ம் எதிரி தங்களிடம் ஷமீல் பாஷாவை குறித்து எவ்வித அறிவுரைகளும் கூறவில்லை. அவ்வாறு கூறியதாக எந்த

ஆவணமும் நிலையத்தில் அல்லது இந்த நீதிமன்றத்தில் இல்லை என்றால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: 16.06.2015 அன்று ஆஜரான ஷமீல் பாஷாவை குறித்து மேல் அதிகாரிகளுக்கு டிஎஸ்பி, எஸ்பி, டிஐஜி ஆகியோருக்கு தகவல் தெரிவித்தீர்களா, அதற்கான ஆவணம் சிபிசிஐடியிடம் கொடுக்கப்பட்டதா ?

பதில்: எனக்கு மேல் அதிகாரிகளுக்கு மட்டுமே தெரிவித்தேன்.

கேள்வி: உங்களின் சீனியரான சிங்காரம், ராஜேந்திரன் ஆகியோருக்கு ஷமீல் பாஷாவினுடைய நிலைய இருப்பு குறித்த தகவல் தெரிவித்ததற்கான ஆவணம் உள்ளதா ?

பதில்: இல்லை.

கேள்வி: ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணி மாலை 06.00 மணி ஆகிய நேரங்களில் தினமும் நடக்கும் நிகழ்வுகளை மேல் அதிகாரியான டிஎஸ்பிக்கு மைக் மூலம் படிக்க வேண்டும் (DSR). அவ்வாறு தெரிவித்ததற்கான ஆவணத்தை சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா ?

பதில்: DSR கொடுத்தாக வேண்டும்.

கேள்வி: ஒவ்வொரு நாளும் மைக்கில் டிஎஸ்பிக்கு, எஸ்பிக்கு தகவல் கொடுத்தீர்களா?

பதில்: உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னேன்.

கேள்வி: அப்படி உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னதற்கான ஆவணம் சிபிசிஐடியிடம் கொடுத்தீர்களா ?

பதில்: கொடுக்கவில்லை.

கேள்வி: 16.06.2015 முதல் 19.06.2015 வரையிலான டிஎஸ்ஆர் தகவல் தந்தற்கான ஆவணங்களை மறைத்து இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: 16.06.2015 முதல் 19.06.2015 வரையிலான டிஎஸ்ஆர் ஆவணங்களை சிபிசிஐடியிடம் கொடுத்திருந்தால் உண்மை வெளிவந்திருக்கும். அந்த ஆவணங்களை மறைத்து பொய்யான வழக்கு புனைவதற்கு உதவி செய்திருக்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: 17.06.2015 காலை முதல் மாலை வரையிலான நிகழ்வுகளை தங்களின் பொதுநாட்குறிப்பில் குறிக்கும்போது ஷமீல் பாஷா குறித்து ஏதேனும் பதிவிடப்பட்டுள்ளனவா ?

பதில்: இல்லை.

கேள்வி: 16.06.2015, 17.06.2015, 18.06.2015 நிலையத்தில் இருந்த மூன்று நாட்களும் நிலையத்தில் இருந்த ஷமீல் பாஷாவுக்கு யார் சாப்பாடு வாங்கிக்கொடுத்தது?

பதில்: மூன்று நாட்களும் அவர் நிலையத்தில் இல்லை. என்று சொல்லிவிட்டு பின்னர் 16.06.2015 அன்று ஷமீல் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார் மற்ற இரண்டு நாட்களும் நிலையத்தில் இல்லை என்று சாட்சி சொல்கிறார்.

கேள்வி: 16.06.2015 அன்று யார் அவருக்கு சாப்பாடு வாங்கிக்கொடுத்தது ?

பதில்: எழுத்தர் முத்துக்குமார் பணம் கொடுக்க ஓட்டுநர் சிவானந்தம் உணவு வாங்கிக்கொடுத்தார்.

கேள்வி: முத்துக்குமாருக்கு பணம் எங்கிருந்து வந்தது என்றால் ?

பதில்: முத்துக்குமாரைத்தான் கேட்க வேண்டும். சொந்த பணமாக இருக்கும். தர்மம் கூட செய்திருக்கலாம்.

கேள்வி: எழுத்தர் முத்துக்குமார் பணம் கொடுத்தார் ஓட்டுநர் சிவானந்தம் சாப்பாடு வாங்கிக்கொடுத்ததை ஜிடியில் பதிந்தேனா என்றால் ?

பதில்: பதியவில்லை.

கேள்வி: 16.06.2015, 17.06.2015 மற்றும் 18.06.2015 ஆகிய தேதிகளில் ஷமீல் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இருந்ததை

உரிய ஆவணங்களில் பதிவு செய்யாமல் உள்நோக்கத்தோடு செய்திகளை மறைத்து வேறு செய்திகளை பதிவிட்டு எதிரிகளை சிக்க வைக்க வேண்டும் என்பதற்காக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

பதில்: சரியல்ல.

கேள்வி: அ.த.சா.ஆ.20ல் உள்ள கையொப்பம் யாருடைய கையொப்பம் என்றால் ?

பதில்: என்னுடைய கையொப்பம்தான்.

கேள்வி: அ.த.சா.ஆ.20ல் 16 தேதியிலிருந்து 19ம் தேதிவரை விசாரணையில் கலந்துக்கொண்டேன் என்று அதில் இருக்கிறதா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: மேற்படி ஆவணத்தில் அ.த.சா.ஆ.20ல் இரண்டாவது பக்கத்தில் மேலிருந்து மூன்றாவது வரியில் "இன்று 19.06.2015 தேதி விசாரணைக்கு வந்த நான் விசாரணையில் மேற்படி பவித்ராவை கூட்டிப்போய் வீடு வாடகைக்கு எடுத்து தங்க வைத்து அவரை தனியாக அனுப்பி வைத்தது தவறுதான்" என்று உள்ளதா என்றால்?

பதில்: உள்ளது. அந்த நான்கு வரிகள் எ.த.சா.ஆ.10.

கேள்வி: அ.த.சா.ஆ.20ல் நான் எழுதியதில் "19.06.2015 அன்று பகல் 13.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன்" என்று இருக்கிறது என்றால் ?

பதில்: சரிதான். அந்த மூன்று வரிகள் எ.த.சா.ஆ.11.

தற்போது நீதிமன்ற நேரம் 07.35 P.M. என்பதால் சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.18 19:51:28 +0530